உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௨௯.] பிரஜோத்பத்தி௵ சித்திரைமீ [பகுதி-௬.

Vol. XXIX. April-May-1931. No. 6.

கம்பராமாயண இன்கவித்திரட்டு.

(௧௬௬-ம் பக்கத் தொடர்ச்சி).

வாலி, தன்னை, எதிர்த்தெய்யாது மறைந்தெய்வானேனென, இராமனை வினவுதல்.

479 அவ்வுரை அமையக்கேட்ட அரிகுலத் தரசு "மாண்ட
செவ்வியோய், அனையதாக; செருக்களத் தெதிர்த்தெய் யாதே,
வெவ்விய புளினு ரென்ன, விலங்கியே மறைந்து வில்லால்,
எவ்விய தென்னை?" என்றான். இலக்குவன் இயம்ப லுற்றான்.

இ - ள். (இராமன் கூறிய) அந்த வார்த்தைகள் மனத்திற் பதியக் கேட்ட வாலி "நீ கூறியதை ஒப்புக்கொள்கிறேன். (யான் என் தம்பி மனைவியைக்கவர்ந்தது இல்லறமுறைக்கு மாறானதென நியாயங்கூறிய நீ) போர்க்களத்திலே (என்னை) எதிர்த்தெய்யாமல், (வில்லறமுறைக்கு விரோதமாக) வெய்ய வேடர் (மிருகங்களை மறைந்துநின்று எய்தல்) போல விலகி மறைந்து (நின்று) வில்லினால் (அம்பு) எய்தது என்ன நியாயத்தால்?" என்றான். இலக்குமணன் (அதற்கு விடை) கூறலுற்றான்.

உரை - வார்த்தை. அமைய - மனத்திற் பதிய. "ஆசாற் சார்ந்தவை அமைவரக் கேட்டல்" (நன்னூல்). அரி - குரங்கு. மாண்ட - மாட்சிமைப்பட்ட. செவ்வி - தன்மை. மாண்ட செவ்வியோய் - மாட்சிமைப்பட்ட தன்மையுடையோனே. வெம்மையுடையோனை வெவ்வியோய் என விளித்தல்போலச், செம்மை (— நடுவுநிலைமை. சிலப்பதிகாரம்) யுடையோனைச் செவ்வியோயென விளித்தானெனலுமாம். அத்தன்மையுடையது என்னும் பொருளுடைய அன்னது அற்று அனையது என்பவை அது என்ற பொருள்பட வரும். ஆக - ஆகட்டும்,

இங்கே 'அனையதாக' என்பது, காஞ்சிப்புராண முத்தீசப்படலம் கஅ-ம் பாட்டில் வரும் 'வார்த்தை யிற்பிறழ் வஞ்சியற் றாகென' என்பதி லுள்ள 'அற்றாக' என்பதுபோல, 'நீ சொல்லியதை நான் ஒப்புக்கொள் கிறேன்' என்ற பொருள்பட நின்றது. 'அனையதாக' என்பதற்கு 'அப் படியானால்' என்பது முந்திய உரை. செரு - போர். களம் - இடம். செருக்களம் - போர் (செய்யும்) இடம். வெவ்விய - கொடிய. புளிஞன், புளினன் என்பன, வேடன் என்னும் பொருளுடையவை. விலங்குதல்— விலகுதல். எவ்வுதல் - ஏவுதல் - செலுத்தல். தாவுதல் தவ்வுத லென வருதல்போல, ஏவுதல் எவ்வுதலென வந்தது. இப்படல முதற் பாட்டில் 'எவ்விடத் துணிந்து' என வருதல் காண்க. என்னை என் பது வினைப்பொருளோடு இகழ்ச்சிப்பொருள்குறித்துநிற்றல் கவனிக் கத்தக்கது. 'உருத்தெய்யாதே' 'விலங்கினை' என்பனவும் பாடங்கள்.

மறைந்தெய்தது எவ்வாறு நியாயமானதென்ற வினவுக்கு இலக்குமணன் விடையளித்தல்.

480 "முன்புநின் தம்பிவந்து சரண்புக, முறையி லோயைத்
தென்புலத் துய்ப்ப னென்று செப்பினன்; செருவில் நீயும்
அன்பினை உயிருக் காகி அடைக்கலம் யானும் என்பாய்
என்பது கருதி, அண்ணல் மறைந்துநின் றெய்த" தென்றான்.

இ - ள். "இராமன் (உன்னை) மறைந்துநின் றெய்தது (ஏதனா லென்றால்) முதலில் உன் தம்பி (அவனிடம்) வந்து சரணமடைய, (உன் னுயிருள்ளவரையும் அவனுயிர் ஆபத்துக்குள்ளாயிருப்பதைக் காக்கும்பொருட்டு) உன்னை எமலோகத்துக் கனுப்புவேனென்று (அபய) வாக்களித்தான். (அவ் வாக்கை நிறைவேற்றுவதற்குப்) போர்க்களத் தில் (உனக்கெதிர்நின்று பொருதால், உன்உயிர் போம்படி நேரும்போது) நீ, உயிர்மீது ஆசையுடையவனாகி, (அதனைக் காத்தற்கு அவனிடம்) சரணம்! என்று சொல்வாய். (அப்படிச் சரணடைந்த உன்னைக் கொல் லுதல் கூடாது. கூடாதாகவே, உன்னைக் கொல்வதாகக் கூறிய வாக்கை நிறைவேற்றல் கூடாததாம்) என்பதைப் பரியாலோசனைசெய்ததனால் (என்று தெரிவாயாக)" என்று விடைகூறினான் (இலக்குமணன்).

'எய்தது,' 'கருதி' என்று முடிந்தது.

சரண் - சரணம் - அடைக்கலம். சரண்புகுதல் - அடைக்கலமடைதல். தென்புலம் - இயமலோகம். உய்த்தல் - அனுப்புதல். செரு - போர். அன்பினை - அன்புடையாய். அண்ணல் - அரசன்; தலைவன்; பெருமையிற்சிறந்தோன். உயிருக்கு அன்பினை ஆகி யென இயைக்க. 'முறையிலோயை' என, 'முறையில்லாதவனான உன்னை' என்ற நெடுந் தொடரை ஒரே ஒருபதமாகச் சுருக்கமாகக்கூறிய இலக்கண நுணுக்கப் பிரயோக நயம், கூர்ந்துநோக்கிக் குதுகலிக்கத்தக்கது. யானும் என்பதில் உள்ள உம்மை, உன் தம்பி தன்னுயிரைக்காக்க 'அடைக்கலம்!' என்றதுபோல நீ உன்னுயிரைக்காக்க 'அடைக்கலம்!' என்பா யென்பது குறித்தது.

உன்னைக்கொல்வதற்குக் காரணம், சரணமடைந்தவனும் குற்றமற்றவனுமான உன் தம்பியைக் காத்தலன்றி அவன்மனைவியைக் கவர்ந்து அறமுறைதிறம்பிய உனது தீயொழுக்கமுமாமெனத்தெரிவாயாக வென்பான் 'முறையிலோயை' என்றானென்க.

தான் மறைந்தெய்ததற்குரிய நியாயத்தை இராமன் கூறினானென, வான்மீகர் கூறியிருக்க, இலக்குமணன்கூறினானெனக், கம்பர் சாதுரியமாகக்கூறிய நாகரிகமுறை கவனித்தற்குரியது.

பகைவனை எதிர்ந்துகொல்லாமல் மறைந்துகொல்லுதல் யுத்ததருமமன்றென நீதிநூல்கள் கூறுதற்கு மாறாக, இராமன் வாலியை மறைந்துநின்று கொன்றது குற்றமென்றும், அது வானச்சந்திரனுக் கேற்பட்ட மறுப்போல, ராமச்சந்திரனுக்கேற்பட்ட பரிகாரமில்லாத மறுவென்றுங் கூறுவதுண்டு. 'மன்னர்க்கு—முன்னஞ் சொல்லும்—துறைதிறம்பாமற் காக்கத் தோன்றினான்'*, 'அறத்துறைநிறுத்தவந்த இறை'† எனச் சிறப்பித்துக்கூறப்பெற்ற கதாநாயகனான இராமனது செயல்களெல்லாம் சிறந்தனவாக இருக்க, இச்செயலொன்றே, குற்றங்கூறுதற் கிடமாயிருக்கிறதென, இராமபத்தருள்ளேயே சிலரும், ஏனையோரெல்லாரும் கூறுவர்.

வாலியை இராமன் மறைந்தெய்ததற்கு வான்மீக கம்பராமாயணங்களிரண்டினும் நியாயங்கள் விரிவாகக்கூறப்பட்டிருக்கின்றன. இருதிற

*† இப்படலம் எஅ; கஙஉ.

நியாயங்களுக்கும் முக்கியாமிசங்களில் மிக்க பேதமுண்டு. கம்பராமாயண நியாயம் மேலே கூறப்பட்டது. வான்மீக நியாயம் வருமாறு:—

வாலி, தன்னை எய்ததற்காக இராமனைக் குற்றங்கூறும்போது "'வேறொருவருடன் நான் போர்புரியும்போது இராமர் என்னை எதிர்க்க மாட்டார்' என்று எண்ணினேன். 'நீர் தருமத்தை நிலைநிறுத்துவதாக வீண்கொடிகட்டிக்கொண்டு அதற்கு மாறாய்நடந்து பாவத்தொழிலைச் செய்கிறவரென்றும், புற்களால் மூடப்பட்ட பாழ்ங்கிணறுபோல்பவரென்றும்,............சாம்பல்மூடிய நெருப்புப்போலத் தருமப்போர்வை போர்த்துத்திரியும் கொடியவரென்றும் இதுகாறும் நான் அறிந்திலேன்............போரில் புறங்காணமுடியாத என்னைக் குடித்து மயங்கித் தூங்குபவரைப் பாம்புகடித்தாற்போல நீர் மறைந்துநின்று கொன்றீர். ....நீர் செய்த காரியத்துக்குத் தகுந்த சமாதானம் சொல்ல வழிதேடும்' [என்று] சொல்லிவிட்டு............இராமருடைய முகத்தைப் பார்த்துக்கொண்டு மௌனமாயிருந்தான்."

"இராமர் அவனை நோக்கி 'நான் உம்மைக் கொன்றதன் காரணம், புராதனமாயுள்ள தருமத்தை விட்டுவிட்டு நீர் உம்முடைய தம்பியின் மனைவியைக் கவர்ந்துகொண்டீர் என்பதே............நீர் செய்த காரியத்துக்கு இத்தண்டனை எவ்விதத்தாலும் தருமமே...................உமது பாபத்துக்குத் தக்கபடி தருமானுசாரமாக நான் தண்டனைசெய்தேன். ....மனிதர்கள்,........மிருகங்களை வலைகளாலும் கயிறுகளாலும்........ எதிர்ப்பட்டும் மறைந்துநின்றும் பிடிக்கிறார்கள். அவர்கள், அம் மிருகங்களைப் பயந்து ஓடும்பொழுதும், நம்பி நிற்கும்பொழுதும், சண்டையிடும்பொழுதும், பராக்காயிருக்கும்பொழுதும், குத்தியும் அடித்தும் கொல்லுகிறார்கள். அதற்குத் தோஷம் ஒன்றும்சொல்லப் படவில்லை............நீர் வானரஜாதியானதால் நீர் என்னுடன் போர் புரிந்தாலும் புரியாவிடினும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை. ....நீர் தருமம் இன்னதென்றுணராது, கோபத்தால், முன்னோர்களுடைய தருமத்தை அநுசரிக்கும் என்னைத் தூஷிக்கிறீர்' என்று சொன்னார்."*

---

*வான்மீகராமாயணம் பண்டித நடேசசாஸ்திரி மொழிபெயர்ப்பு.

வான்மீகத்தில், இராமன் முதலில் வாலியை மனிதனுகக்கொண்டு, 'நான் உம்மைக் கொல்லுறதன் காரணம் நீர் உம்முடைய தம்பிமனைவியைக் கவர்ந்துகொண்டீர் என்பதே' என்று, வாலி மனிதன் செய்யத்தகாததைச் செய்தானென்று குற்றஞ் சார்த்திவிட்டுப் பின்பு அவ்வாலியையே மிருகமாகக்கொண்டு 'நீர் வானரஜாதியானதால நீர் என்னுடன் போர்புரிந்தாலும் புரியாவிடினும் உம்மை நான் கொல்லுவதில் தோஷமில்லை' என்று கூறியிருப்பது முன்பின் விரோதமாய் ஒப்புக்கொள்ளத்தகாததாகத் தோன்றுகின்றது.

கம்பராமாயணத்தில், வாலியை இராமன் மறைந்தெய்ததற்குக் கூறும் நியாயம், அவன் தம்பிக்களித்த வாக்கை நிறைவேற்றுதற்கு அவனை மறைந்துநின்று கொல்லுதல் இன்றியமையாததாயிருந்ததென்பது. இந்த நியாயமும், வாக்குத்தத்தநிறைவேற்றமாகிய ஒருதருமத்துக்கு எதிரியை மறைந்துகொல்லாமையாகிய வேருெருதருமம் பலியிடப்பட்டதாமெனக் குற்றங்கூறுதற்கிடமாயிருத்தலால், ஒப்புக்கொள்ளத்தகாததாகவே தோன்றுகிறது.

வாலியை ராமன் மறைந்தெய்தது, தோற்றத்தில் தருமவிரோதமானதேயன்றி, உண்மையில் தருமாநுசாரமானதேனக் கவி குறிப்பாக உணர்த்தல.

481 கவிகுலத் தரசும், அன்ன கட்டுரை கருத்திற் கொண்டான்.
அவியுறும் மனத்தனுகி, 'அறத்திறன் அழியச் செய்யான,
புவியிடை, அண்ணல்' என்ன, எண்ணினன் பொருந்த, முன்னே
செவியுறு கேள்விச் செல்வன் சென்னியின் இறைஞ்சிச் சொன்னன்.

(இதன் பொருள்,) வாலி, அந்தப் பொருள்பொதிந்த வார்த்தைகளை மனத்திற் கொண்டான். செவியுற்ற கேள்விச்செல்வத்தையுடைய (வனுன அ)வன், இராமன் பூமியிலே அறத்தின் உறுதி அழியும்படி (ஒன்றும்) செய்யானென்று எண்ணினன். (எண்ணி,) மனம் அடங்கித் தலையால் வணங்கி (ப் பின் வருவதை)ச் சொன்னன் (என்பது.)

இதனில் அடக்கப்பட்டிருக்கிற புதைபொருள் புலப்படப் பெய்வன பெய்து நிரப்பி விரித்துரைக்கலாம். அவ் விரிவுரை வருமாறு:—

வாலி, (இலக்குமணன் கூறிய) அந்தப் பொருள்பொதிந்த வார்த்தைகளை (க் கேட்டு) மனததில் (வாங்கிக்) கொண்டான். (பூமியில்,

அதர்மம் மேலிட்டுத் தர்மம் தாழ்வுறுங்காலங்களில், முன்னையதைப் போக்கிப், பின்னையதைக் காத்து நிலைநிறுத்தும்பொருட்டு நீதிபாலன ஆதிபகவன் அவதாரஞ் செய்வானென்றும், அவன் இந்தக்காலத்தில் இராமனாக அவதரித்திருக்கிறானென்றும் பெரியோர்சொல்ல,) முன்பு (அப் பெரியோர்பால் கல்விகற்றபோது) கேட்ட கேள்விச்செல்வத்தை யுடையவன் (ஆன வாலி, அத்தகைய) இராமன் அறத்தின் உறுதி அழி யும்படி (யான யாதொருசெயலும்) செய்யானென் றெண்ணினான். (அப் படி எண்ணவே, சமாதானந் தோன்றச் சாந்தி அடைந்து) மனம் அடங்கி (அதனால் அகங்காரம் நீங்கி, அதனால் தற்போதம் கழன்று, அத னால் பாபோத மடைந்து — ஞானக்கண் பெற்று, — அதனால் பகவானே இராமனாகித் தன்வினைக்குத தக்க பலனளித்தானென்று தெரிந்து, அநியாயஞ் செய்தவனென்று இதுவரை தான் வணங்காதிகழ்ந்த இராம னுக்குச் சாட்டாங்கநமஸ்காரம்செய்யக்கருதியபடி செய்யச் சத்தி யின்றித், தன்னெஞ்சை உருவிக்கொண்டிருந்த அம்பை மேற்கொண் டுருவாமல் பற்றிக்கொண்டிருந்த கைகளால் அஞ்சலிசெய்யவும் அசக்த னாய்) த் தலையால் வணங்கி (ப் பின்வருவதனை) ச் சொல்வானானான்.

கவி — குரங்கு. குலம் — கூட்டம். அரசும் என்பதில் உம்மை இசை நிறை. கட்டுரை — பொருள்பொதிந்த சொல் (சிலப்பதிகாரம்). அவி தல் — அடங்குதல் (புறம்). உறு, துணைவினை. அறத்திறன் — தரு மத்தின் உறுதிநிலைமை. அண்ணல் — தலைவன்; கடவுள் (தமிழகராதி). செவியுறுதல் — கேட்டல். சென்னியின் — தலையால். இறைஞ்சுதல் — வணங்குதல். "முன்னே செவியுறு கேள்விச் செல்வன், 'அண்ணல் புவி யிடை அறத்திறன் அழியச் செய்யான்' என்னப் பொருந்த எண்ணினன், மனம் அடங்கிச், சென்னியின் இறைஞ்சிச் சொன்னான்" என இயைக்க. 'கவிகுலத்தரசு மன்னன்', 'என்ப தெண்ணினன் பொருந்தி', 'சென்னி யை இறைஞ்சி' என்பனவும் பாடங்கள்.

உரையில் எடுத்துக்கூறப்பட்ட 'அஞ்சலி செய்யவும் அசக்தனாய்' என்றதனோடு, இதன்பின், வாலி, 'இளவல் தன்னை — வன்துணைத் தடக்கை நீட்டி வாங்கினன் தழுவி' என வருவதும், அவன் அங்கதனை 'நெஞ்சிற்புல்லி' என வருவதும் பொருந்தவில்லையே எனின், அச் செயல்கள் அம்புப் பிடிப்பை விட்டுவிடாமல், பூரணமாகவன்றி அரை

குறையாக இயன்றமட்டிற் செய்யப்பட்டன அல்லது பாவனையாகச் செய்யப்பட்டன வென்பது, இறுதியில், 'கை அவன் நெகிழ்தலோடும் கடுங்கணை கால வாலி — வெய்யமார் பகத்துள் தங்கா தாருவி' என வருதலால் விசதமாம்.

கம்பர், கதையை நடத்திக்கொண்டுபோகையில், அநீதமாகத் தோன்றும் நிகழ்ச்சிகளுக்குத் தோன்றாக்காரண முளவெனச் சூசிப்பித்துப்போவர். கைகேசி இராமனைக் காட்டுக்குப்போகச்செய்தபோது, நல்லாளொருத்தி தீங்கிழைக்க நல்லானொருவன் தீங்குக் குள்ளாம் அநீதத்துக்குத் தோன்றாக் காரணம் உளதென 'வெவ்வினை அவள்தர விளைந்த தேயுமன் — றிவ்வினை இவன்வயின் எய்தற் பாற்றுமன் - றெவ்வினை விளைந்ததோ? ஏவர் எண்ணமோ?' என (நகர்நீங்குபடலம் கசுஈ-ம் கவியில் வசிட்டன்வாயிலாக)க் குறிப்பித்தார். அதுபோல, இராமன் மறைந்தெய்ததற்குத் தோன்றாக் காரணத்தை இந்தக் கவியில் வாலி வாயிலாகக் குறிப்பித்தார்.

இராமன் வாலியை மறைந்தெய்ததற்கு இலக்குமணன் கூறிய நியாயத்தை வாலி மனத்திற்கொண்டானென்றானன்றி, ஒப்புக்கொண்டானென்றாரல்லர்: ஒப்புக்கொள்ளவில்லை யென்று கூறினாருமல்லர். இலக்குமணன்கூறிய நியாயம், இதற்குமுந்திய கவியின் விசேடவுரையிற் கூறியவாறு, அவன் சொற்படியே, ஒரு தருமத்தைக் காக்க மற்றொரு தருமத்தை அழித்ததாயிருத்தலன்றி, எதிர்த்தாரது பாதிப்பலம் பெறும் வரம் படைத்த வாலியை எதிர்ப்பவர், தம் பாதிப்பலத்துடன் தன் பலமுமுடைய அவனால் செயிக்கப்படுதல் திண்ணமாதலால், இராமன் வாலியை எதிராமல், வீரதருமத்துக்கு விரோதமாக, வஞ்சகமாக, மறைந்து நின்று அம்பெய்து கொன்றானென்று குற்றங் கூறுதற் கிடமாயிருக்கின்றது. இந்த ஆட்சேபங்களுக் கிடமான நியாயமன்றி, வேறு தக்க நியாயம் உண்மையை உறுதியாகக் கொண்டே, கம்பர், தான் மறைந்தெய்த அம்புபட்டுச் சாய்ந்து கிடந்த வாலி எதிரே இராமன் போந்ததை 'மன்னர்க்கு முன்னம் சொல்லும் — துறைதிறம் பாமற் காக்கத் தோன்றினான் வந்து தோன்ற' என்று துணிந்து கெம்பீரமாகச் சொன்னார். தக்க நியாயம் இல்லையாயின், 'இராமன் வந்தான்' என விசேடணமின்றி, வெறுமனே சொல்லியிருப்பார். அவர் தகுதியாகக்கொண்ட நியாயம் யாதோவெனின், அது வருமாறு:—

வாலி, இராமனம்புபட்டு இரத்தம் மிகுந்து வடிந்து உடற்கருவிகளும் உளக்கருவிகளும் ஒடுங்கினவனானான். அப்போது, முன் கூறியவாறு, பகவான் தர்மரட்சணநிமித்தம் இராமனாக அவதரித்திருக்கிறானென்று கேட்டிருந்தது நினைவிற்கு வர, 'இராமன் எது செய்யினும் அது தருமாநுசாரமாயிருக்கும்' என்று எண்ணிக் கோபத்தைவிட்டுச் சமாதானமுற்றுத் தன்முனைப்பின்றி மனம் அடங்கத், தற்போதம்*கழன்று பரபோத†மடைந்து சீவன்முத்தனானான்.

தற்போதம் நீங்குதற்குமுன் நிகழும் நிகழ்ச்சியாகிய மனம் அடங்குதல் வாலிக்கு நிகழ்ந்ததென்பதை 'அவியுறும் மனத்தனாகி' என்றதனாற் பெறவைத்தார். தற்போதம் நீங்குதற்குப் பின் நிகழும் நிகழ்ச்சியாகிய பரபோதம் பெறுதலை அவன் உற்றானென்பதைப் பின்னர், அவன் இராமனைநோக்கி 'ஆவிபோம் வேலைவாய் அறிவு‡தந் தருளினாய்' என்றா னென்றதனாற் பெறவைத்தார். தற்போதநீக்கத்துக்கு முன் நிகழும் மன அடக்கமும் பின் நிகழும் பரபோதப்பேறும் நிகழ்ந்தமையைக் கூறியதனால், இரண்டுக்கும் இடையில்நிகழும் தற்போதநீக்க நிகழ்ச்சியைக் கூறாமலே பெறவைத்தார். பரபோதம்பெற்றவர் தேகத்தோடிருக்கும்போது பிறவாநிலையடைந்த சீவன்முத்தரென்பது கூறவேண்டியதில்லை. ஆவி தேகத்தைவிட்டுப் போகுமுன் சீவன்முத்தனான வாலி, ஆவி தேகத்தினின்று நீங்கியபோது, விதேகமுத்தனானா னென்பதை 'வாலி - அந்நிலை (- சீவன்முத்தனாயிருந்தநிலையைத்) துறந்து (- விட்டுத், தேகத்தினின்று நீங்கி, விதேகமுத்தனாகி) வானின் அப்புறத் துலகன் (இந்திரலோகம் பிரமலோகம் முதலிய பதமுத்திகளுக்கு அப்பாற்பட்ட நிலையான பரமுத்தியடைந்தவன்) ஆனான்' என்றதனாற் பெறவைத்தார். அவன் அடைந்த முத்தி, பதமுத்தியன்று, 'மோக்ஷம்' என்னும் வீடாகிய பரமுத்தியே யென்பதை, அவன் 'வெற்றர செய்தி

---

*தற்போதம், தன்னறிவு, சீவபோதம், ஆன்மபோதம், ஆன்மஞானம், இகஞானம், சிற்றறிவு என்பவை ஒருபொருட் பல்பெயர்.

†பரபோதம், தேவபோதம், பரஞானம், தத்துவஞானம், சிவஞானம், மெய்ஞ்ஞானம், மெய்யுணர்வு, கேவலவுணர்வு, பேரறிவு, ஞானதிருட்டி, ஞானக்கண் என்பவைகளும் ஒருபொருட் பல்பெயர்.

‡இந்த அறிவுக்குத் தத்துவஞானம் என முந்திய உரைகாரர் பொருள்கூறியிருத்தல் காண்க.

எம்பி வீட்டரசெனக்கு விட்டான்' என்றுனென்றதனாலும், 'யார்க்கும் சான்றென நின்ற வீரன் தான் வந்து வீடு தந்தான்' என்றுனென்றதனாலும் வலியுறுத்தினர். இப்படலத்துக்கு 'வாலி மோக்ஷப்படலம்'* என்ற பெயருண்மை இங்கே கவனிக்கத்தக்கது.

மோக்கபக்குவர்க்கு† முத்தி அளிக்க, மாநுடச் சட்டை சாத்திக்‡ குருவாயெதிரே தோன்றி அநுக்கிரகஞ் செய்யும் பரம்பொருள்$, (பின்பு, வாலி, தன் மகன் அங்கதனுக்கு இராமனைச் சுட்டிக்காட்டித் 'தன்னின் — மேலொரு பொருளும் இல்லா மெய்ப்பொருள் வில்லும் தாங்கிக் — கால்தரை தோய நின்று கண்ணுக்கும் எளியன் ஆனான்' என்று கூறுமாறு) அவனுக்கெதிர்நின்ற இராமனாகத் தோன்றிச் சட்சு தீட்சை§யாக அருள் நோக்கம் அளிக்க, அடைந்த ஞானதிருட்டியினால் அவன் நோக்கியபோது, தன்னை இராமன் மறைந்தெய்த செயல், உயிர்கள் செய்யும் வினைக்கும் வினைசெய் விதத்துக்கும் தக்கவாறு பலனூட்டும் பரம்பொருள் தர்மாநுசாரமாகச் செய்த நீதிச்செயலென்று அநுமானமாகவன்றிப் பிரத்தியட்சமாகத் தெரிந்தான்.

வாலியை ராமன் மறைந்தெய்தற்குரிய உண்மை நியாயம் ஒன்று, உளதென ஊகித்து உணரும்படி விடப்பட்டதன்றிக், கூறப்படவில்லை. கூறப்படாததன் காரணம் யாதெனின், அந்த நியாயம் யாருக்குக் கூறப்பட வேண்டுமோ, அந்த வாலி, அதனை இக ஞானமட்டும் உள்ளவரை அறியாதிருந்தானேயன்றிப் பரஞானம் படைத்தபோது அறிந்து கொண்டானென்பது.

அந்த உண்மைநியாயம் இதுவென, அவன்போல ஞானதிருட்டி பெற்றாலன்றிப் பிறரெவராலும் தெளிதலும் செப்புதலும் இயலாத

---

* பண்டித சவரிராயர், பாலசரஸ்வதி இருஷ்ணமாச்சாரியர் பதிப்பித்திருக்கிற கிஷ்கிந்தா காண்டம் பக்கம் 46 அடிக்குறிப்பைப் பார்க்க.

† மோக்க பக்குவர்—மோட்ச மடையும் பக்குவ முற்றவர்.

‡ மாநுடச் சட்டை சாத்தி—மனித வடிவங் கொண்டு.

$ பரம்பொருள்—மெய்ப்பொருள், செம்பொருள், பராப்பொருள், சிவம், தெய்வம், பிரமம், கடவுள், கருத்தா, முதல்வன் என்பவை ஒருபொருள் குறித்தவை.

§ சட்சு தீட்சை—நயன தீட்சை—பார்வையால் உபதேசித்தல்.

தென்பது இயம்பவேண்டியதில்லை. ஆயினும், அது இன்ன தன்மையதா யிருக்கலாமென மனோபாவனை துணையாக ஊகிக்கலாம்.

உண்மைநியாயத்தை உணர்ந்தபோது, வாலி, பின்வருமாறு கருதியிருப்பான்:—'பொருள்கொடுப்பவன், உயிர்க்கு உறுதிசெய்யும் மருந்தைக் கேட்டாலும், இறுதிசெய்யும் நஞ்சைக் கேட்டாலும், கடைக்காரன், பெற்றபொருளுக்குப் பிரதியாகக் கேட்டதைக் கொடுத்தல் போலத், தவஞ்செய்பவன் நல்லவரத்தைக் கேட்டாலும், தீயவரத்தைக் கேட்டாலும் அவனுடைய உபாசனாமூர்த்தி கொடுக்கும். என் தவப் பலனாக, என்னை எதிர்த்தாரதுபலத்திற் பாதி என்னைச்சேரவேண்டு மென்று வரங்கேட்டுப்பெற்றேன். எதிரிகள்பலத்திற் பாதியைப் பறித் துக்கொண்டு, அவர்களை அநியாயமாக வென்றுவிட வஞ்சகஞ்செய்த யான், என்னை எதிராமல் என் எதிரி எவனேனும் என்னைக் கொல்லலா மென்பதை ஊழ்வலியால்* உணர்ந்தேனில்லை.

இரவிலும் பகலிலும் இறவாமலும், மனிதராலும் மிருகங்களாலும் மாளாமலும் வாழ்ந்திருக்க வரம்பெற்ற இரணியன் பகலும் இரவுமல்லாத சாயங்கால சமயத்தில் மனிதனும் மிருகமுமல்லாத நரசிங்கத்தால் இறந்துபடுவதை எதிர்பாராததுபோலவும், 'நாங்கள் எவராலும் கொல் லப்படாதிருக்கவேண்டும்' என்று வரம்பெற்ற சுந்தோபசுந்த ரிருவரும் ஒருவர் மற்றொருவரால் உயிரிழப்பதை முன்னறியாததுபோலவும், என் னைக்கொல்வோன் என்னை எதிராமற்கொல்வானென்பதை அறியும் எதிர் கால அறிவு இல்லாமற்போனேன்.

இராவணாதி யிராக்கத சங்காரநிமித்தம் திருமால் இராமனாகவும் தேவர்கள் அவன் சேனைவீரராம் வானரராகவும் பிறந்திருக்கும் அவதார ரகசியங்களைக் கேள்வியால் அறிந்திருந்தபடி யான், ராமசேனைத்தலைவனா யிருந்தும், என் வலிமிகுதியால் செவிப்பட்டசெய்தியைப் பொருட் படுத்தாமல், ஈசனும் ராசனுமான இராமனுக்கு எதிரியான இராவண னோடு கூடி அக்கினிசாட்சியாக நட்புரிமைகொண்டேன். இது இராமகாரிய மூலநாச முயற்சியாய் ஒருங்கே ஈசத்துரோகமும் ராசத்துரோகமும் ஆயிற்று. இதற்குப் பரிகாரம் கொலைத்தண்டமே யன்றி வேறு தண்டம் யாதுமின்று. அன்றியும் அரக்கரை அடக்க

*ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று—சூழினும் தான்முந் துறும்.

வல்ல ஆற்றல் அடைந்திருந்தும், அவ் அரக்கரும் அவர் தலைவனை இராவணனும் உலகிற்கும் இராமனுக்கும் இழைத்துவந்த தீங்குகளைக் கண்டும் காணானேன்போலத் தடுக்காதிருந்தேன். இவ்வாறு, செய்யத் தகாத காரியத்தைச் செய்தும் செய்யத்தக்கதைச் செய்யாதும் தவறினேன்.* இவை யான்செய்துள்ள தவறுகள். இனிச் செய்யக் கிடந்த தவறும் ஒன்று உண்டு. அது, ராமராவணயுத்தத்தில் நான் சத்தியந்தவறுமைப்பொருட்டு இராவணன்பக்கம்நின்று இராமனுடன் போர்புரிதல்; அன்றேல் சத்தியந் தவறுதல்: இவ்விரண்டுள் ஒன்று.

உயிர்கள் செய்யும் வினைக்குத் தக்க பலனைத் தக்க காலத்தில் தக்க இடத்தில் தக்கார்வாயிலாக வினைச்சட்டத்தின்படி † அடையச்செய்யும் நீதிரூபமாகத்‡ தன்னை வெளிப்படுத்தும் பரம்பொருள், என்னை என் வினைப்பயனை அடைவிக்க, ஊர்க்காவற்காரன் வேடமாறிக் கள்ளனைக் கள்ளவழியாகப்பிடித்தல்போல, என்னை இராமனுகி மறைந்துநின்று கொன்று நீதிசெலுத்தியதென்று அப்பரம்பொருள் அளித்த ஞானக் கண்கொண்டு கண்டறிந்தேன்.

யான் நேரல்லாததைச் செய்துவிட்டு நேரல்லாத தண்டனை யடைந்தது நியாயமன்றென்றும், தருமத்துக்கு விரோதமாக நடந்து விட்டுத் தருமவிரோதமாகக் கொல்லப்பட்டது தவறென்றும் கருதியது மடமையே. உலக ஒழுங்குக்கு மாறாக நடப்பவர்களுக்கு உலக ஒழுங்குக்கு மாறான தண்டனை உரியதே. மிருகம்போல நடந்த யான் மிருகம்போலக் கொல்லப்பட்டதற்கு மிருகம்போலக் குறைகூறுமையே முறையானதாம்.

யான் என் வலிமை காரணமாக மெலியாரை வருத்திய பாபபலனைக் கொலையுண் டனுபவித்தல் பிராயச்சித்தமாகப் பாபவிமோசனம் பெறவும், என் வலிமை மிகுதியால் மேலுமேலும் பிறரை வருத்தி மிக்க

---

*செய்தக்க அல்ல, செயக்கெடும்; செய்தக்க,--செய்யாமை யானும் கெடும்.

† வினைச்சட்டம் (Law of Karma), கருமபலநியதி, தருமசக்கரம், தேவாக்கினை, கடவுளாணை, "இருவினைப்பயன் சென்றடைதற் கேதுவாகிய நியதி" (குறள் உரை) ஆகிய ஊழ், விதி என்பவை ஒருபொருள் குறித்தவை.

‡ இப்படலம் கஉ௫-ல் 'உண்டெனும் தருமமே உருவமா உடையநிற்—கண்டனன்' என வாலி கூறுதல் காண்க.

பாபம் ஈட்டுவேனுயிருந்தேனைத் தடுத்தாட்கொள்ளவும், எம்பெருமான் செய்த செயல், தேகச் சேமநிமித்தம் தேகத்தில் ஒருபாகத்தைச் சேதிக்கும் சத்திரிகர்* செயல்போல, என் ஆன்மாவை இரட்சித்தற்கு என் தேகத்தை அழித்ததா யுள்ள அருட்செயலே. ஒவ்வொரு விதிக்கும் விலக்குண்டு.† ஒரு வீரனை மற்றொரு வீரன் மறைந்தெய்வது அதர்மமென்னும் விதிக்கு விலக்கு, இராமன் என் திறத்தில் இயற்றிய செயலாம். ஒருவன் தற்கொலைசெய்தற்குச் சாதகமாகக் கருதி வைத்திருந்த நச்சுநீர்ப் பாத்திரத்தில் வேறொருவன் களவாக அந்நீரைக் கொட்டிவிட்டு நன்னீரைப் பெய்து வைத்தல் களவாகாததுபோலவும், ஒருவனை அநியாயமாகச் சாவாமல் தடுப்பதற்குச் சாற்றிய பொய் பொய்யாகாததுபோலவும், இராமன் மறைந்துநின்றது வஞ்சகமாகாது; கொன்றது கொலையாகாது; இரண்டு செயல்களும் இரட்சகச் செயல்களே.'

இவ்வாறு, ஞானக்கண்கொண்டு கண்டு வாலி கருதியதாகக்கொண்டால், இராமன் மன்னர்முறைக்கு மாருக மறைந்தெய்தசெயல் இகழத்தக்க குற்றச்செயலாகாமல் புகழத்தக்க குணச்செயலாம்.

தனக்கு உதவிசெய்யும் சத்தி சற்றுமில்லாத சிசுவினைக் கொலைபுரிதல் மாபாதகத்துள் மாபாதகமென்பது தெளிவு. அந்தச் சிசுக்கொலையும் அதனைப் பத்துமாதம் வயிற்றுள்வைத்து வளர்த்த மாதாவாலேயே செய்யப்படுமானால், அதனை என்னென்பது! அப்படிப்பட்ட—நினையவே நெஞ்சு திடுக்கிட்டு நடுக்குற்றிடச்செய்யும்—கோரமான பாதகச் செயலைச் செய்தாள், பாரத கதாவீரர் குலமுதல்வனான சந்தனுமகாராசனுக்குத் தருமபத்தினியானவள். அவள் செய்த சிசுவதை இராமன்செய்த வாலிவதை சம்பந்தமான காரணகாரியத் தொடர்ச்சிமுறையை விளக்குவதாயிருத்தலினால், அவ்வதை எவ்விதம் நிகழ்ந்ததென்ற வரலாற்றின் சுருக்கம்‡ இங்கே தரப்படுகின்றது:—

சந்தனுமகாராசன், ஒருநாள் வேட்டையாடியபோது, தாகம் அதிகப்பட, அதனைத் தணித்தற்குக் கங்கைக்கரையை அடைந்தான். அங்கே, பேரழகுடைய மாதரசி ஒருத்தியைக் கண்டு, தாகம் தவிர்ந்து,

---

*சத்திரம்—ரணவைத்தியம். சத்திரிகர்—ரணவைத்தியர்.

† "Every rule has its exception."

‡ விரிவை வில்லிபாரதம் குருகுலச் சருக்கம் ௩௩-௭௩ ல் பார்க்க.

மோகம் மிகுந்து, அவளை அடைந்து, "நீ கன்னிகையெனனில், என்னினும் தன்னிய னில்லை" என, அவள், "ஆம், நான் கன்னிகையே; ஆயின், கண்டவர் நடுநடுங்க நான் யாதியாது தீது செய்யினும் நீ பொறுப்பையேல், உன் மனைவியாக இருப்பேன்; எப்பொழுது பொறுப்பதை மறுப்பையோ, அப்பொழுது பிரிவேன். இது என் பிரதிக்கினை" என, அதற்கு இசையாவிடில், உயிர்போய்விடுமென்று இசைந்து அவளைக் கல்யாணஞ் செய்துகொண்டான்.

அவள், தலைப்பிள்ளை பெற்றவுடன் அதனைத் தண்ணீருள் மூழ்குவித்துச் சாவச்செய்தாள். அதன்பின் உற்பவித்த ஆறு குழவிகளையும் அதே கதி அடையச்செய்தாள். அவன், எட்டாம் குழந்தை சனனமானவுடனே, அதனைத் தாய் கைப்பற்றுமுன், தான் கைப்பற்றி, "இந்த மகனை எனக்கு ஈந்து என் குலத்தை நிலைக்கச்செய்தருள்வாயாக" என்று பிரார்த்திக்கப், "பிரதிக்கினைப்பிரகாரம் பிரிவேன்" என, "நீ ஆர்? ஏன், ஏழு குழந்தைகளையும் இறந்திடச்செய்தாய்?" என, முன்னைய நிகழ்ச்சிகளை மொழிகின்றாள்:—

"முன் ஒருசமயத்தில், பிரமசபைக்கு வந்திருந்தவர்களுள், பெருங்காற்று வீசக் கலைகுலைந்த கங்கையின் அங்கத்தைக் கண்ணுறாதபடி எல்லாரும் கண்மூடிக்கொள்ள, ஒருவன் காமுற்று நோக்கினான். பிரமன், கோபித்து, 'வருணதேவ, மண்மீது வேந்தனாகப் பிறந்து வேண்டுமளவு காமநுகர்ந்து மீண்டு வருக' எனச் சபித்து, அவன் மனைவியான கங்கையை 'நிர்த்தோஷியான நீ, மனிதப் பிறப்பெடுக்காமல், மனித வனிதை வடிவமெடுத்து, அவன் காதல் தீர்தல் காறும் அவன் மனைவியாக வாழ்ந்து வருவாயாக' என்றான்.

அவள் மண்ணுலகை நோக்கி வரும் வழியில், அவளை அஷ்டவசுக்கள் சந்தித்து வந்தித்து 'எங்கள் தலைவனது குழந்தைக்குப் பாலுக்காக, அவனும் அவன் கருத்துக் கிணங்கி மற்றெழுவரும் வசிட்டமுனியின் காமதேனுவைக் களவுசெய்ய, அம் முனிவன் முனிவுகூர்ந்து 'நீங்கள் எண்மரும் மனிதராகப் பிறந்திடுக. தலைவன், களவுக்கும் தலைவனாயிருந்ததனால், மண்ணில் நெடுங்காலம் வாழ்ந்து மீண்டு வருக. ஏனை எழுவரும் பிறந்தவுடன் இறந்து திரும்புக' என்று சபிக்க, அந்தச் சாபவசத்தினராய், மண் நோக்கிச் செல்கின்றோம்' என்றனர்.

அவள், தன் வரலாறு கூறி, 'நீங்கள் எல்லீரும் என் வயிற்றில் உதித்திடுங்கள். தலைவன் தவிர, மற்றெழுவரும் மண்மீதுறுமுன் விண்மீதுறச் செய்வேன்' என்று கூறிப், பூமியை அடைந்து மானுட மடந்தை யானாள். அவளை நீ கங்கைக் கரையிற் சந்தித்தாய். அதன் பின் நிகழ்ந்தவை அனைத்தும் அறிவை."

கங்கை தன்குழந்தைகளைக் கொன்ற ஒரு செயலே, சந்தனு, இவ்வுலகநிகழ்ச்சிகளையறிந்தமைகொண்டு நோக்கியபோது இரக்கமற்ற தீச்செயலாகவும், மேலுலகநிகழ்ச்சிகளை யறிந்தமைகொண்டு நோக்கிய போது கருணைகாரணமான நற்செயலாகவும் இருந்ததுபோல, இராமன் வாலியை மறைந்துநின்று கொன்ற ஒருசெயலே வாலி இகலோக அறிவு கொண்டுநோக்கியபோது அதர்மகிருத்தியமாகவும் பரலோக அறிவு கொண்டு நோக்கியபோது சுதர்மகிருத்தியமாகவும் இருந்தது காண்க.

தன் குழந்தை உயிரைக் காக்கும் தலைமைக் கடமையுடைய தாயான கங்கை, தன்குடிகளின் உயிர்ப்பாதுகாப்பை முதற் கடனாகக் கொண்ட இராசனான இராமனுக்கும், இளமை காரணமாகத் தன்னைக்காக்கச் சத்தியற்ற குழந்தை, இராமன் மறைந்துநின்றமையால் தன்னைப் பாதுகாக்கமுடியாதிருந்த வாலிக்கும், குழந்தைவதை வாலிவதைக்கும், உவமை. இனி, முற்பிறப்பறியுமுன் சந்தனுவுக்குக் கோரமான பாவமாயிருந்த கங்கைசெயல், ஞானக்கண் பெறுமுன் வாலிக்கு வஞ்சகமும் வன்கண்மையுமாயிருந்த இராமன்செயலுக்கும், முன்பிறப்புநிகழ்ச்சிகள் தெரிவிக்கப்பெற்றபின் கங்கைசெயல் நல்ல புண்ணியச்செயலென்று சந்தனுதெரிந்துகொண்டமை, ஞானக்கண்பெற்றபின் இராமன் செயல் பரிசுத்தமும் பரமகாருணியமுமானசெயலென்று வாலி கண்டு கொண்டமைக்கும் உவமை.

வாலி மன்னிப்பு வேண்டல்.

482 "தாய்என உயிர்க்கு நல்கித் தருமமும் தகவும் சால்பும்
நீஎன நின்ற நம்பி, நெடிதுநீ நோக்கும் நோன்மை
நாய்என நின்ற எம்மால் நவைஅற உணர லாமே:
தீயன பொறுத்தி" என்றான், சிறியன சிந்தி யாதான்.

இ-ள். (இராமனருளால் தத்துவஞான மென்னும் மெய்யுணர்வு பெற்றதனால், பரலோக சம்பந்தமான மகத்தான எண்ணங்களுடையவ

ளுய், இகலோக சம்பந்தமான) அற்ப (விஷய) மானவைகளை (ப் பொருளாக) க் கருதாதவன் (ஆன வாலி), "(குழந்தைக்குத்) தாய் (அன்புசெய்தல்) போல உயிர்களுக்கு (நீ) அருள்செய்து, நீதியும் நடுவுநிலைமையும் (எங்கும்) நிறைவும் (ஆனவை வேறு நீ வேறென்றில்லாமல் அவை அனைத்தும்) நீயேயென்று சொல்லும்படி (சருவசாட்சியாய்) நின்ற புருடோத்தமனே, (பேறிவுடைய) நீ (நெடுங்காலத்துக்குமுன் செய்த வினைகள் நெடுங்காலத்துக்குப்பின் பலன் தருவதை முன்னும் பின்னுமாக) நெடுங்காலம் (உள்பட) நோக்கி (ஐயந் திரிபின்றி) அறியும் வல்லமை (இப்படிப்பட்டதென) நாய்போல (க் கடைப்பட்டு) நின்ற என்போலியரால் (அறியலாகாதது; அறிந்தாலும் ஐயந் திரிபாகிய) குற்றமில்லாமல் அறியமுடியாது, (அவ் வல்லமையை நீ கடாட்சித்தருளிய தத்துவஞானத்தால் யான் அடைந்து எல்லாந் தெரிந்துகொண்டேன். அதற்குமுன் அறியாமையால் யான் செய்த) குற்றங்களைப் (பகுத்தறிவில்லாத மிருகமான குரங்கு செய்த குற்றங்களாகக்கருதிப்) பொறுத்தருள்வாயாக" என்று கூறினுன்.

'நல்கல்', 'அருளல்' போலச், செயப்படுபொருள் குன்றுத வினையாய்க் கொடுத்தற்பொருளையுணர்த்தலன்றிச், செயப்படுபொருள்குன்றிய வினையாய் அருள்செய்தல் என்னும் பொருளையுணர்த்தலும் உடையது. இங்கே நல்கலின் பொருள் அருள்செய்தலென்பது. தருமத்துக்குள்ள புண்ணியம் நீதி யென்ற இரு பொருள்களுள் நீதி, இங்கே பொருத்தமுடையதாம். நீதிக்கு இன்றியமையாத நடுவுநிலைமை யென்னும் பொருளுடைய 'தகவு' அடுத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க. சால்பு—நிறைவு—எங்கும் நிறைந்திருத்தல்—சருவவியாபகத்துவம். இறைவன் சருவவியாபியாயிருந்து எங்கெங்கும் எவ்வெக்காலத்தும் நிகழும் உயிர்களின் செயல்களையும் அறியும் சருவசாட்சியாய்ச், சாதாரண நீதிபதிகள்போலத் தனக்கு அந்நியமான சாட்சிகளின் உதவி வேண்டாமல் உண்மை அறிந்து உயிர்கள் செய்த வினைக்குத் தக்க பலனை அடையச்செய்து நீதிசெலுத்துகிறுனென்பதைக் குறிப்பிக்கும் 'சால்பு' என்பு

தும் மேலே கூறியவாறு தருமத்துக்கு இங்கே நீதியென்ற பொருள் பொருத்தமானதென்பதை வலியுறுத்தல் காண்க. 'தருமமும் தகவும் சால்பும்' என்பதன் பொருள் 'தருமமும் நடுவுநிலைமையும் நற்குண நிறைவும்' என்பது முந்திய உரை. நம்பி—ஆடவரிற் சிறந்தோன், நெடிது—நெடுங்காலம் (குறள் ௬௪௩). நோன்மை—வலிமை—வல்லமை. நவை—குற்றம். 'நம்ப,' 'நெறியினில் நோக்கும் நேர்மை,' 'எம்பால்', 'உணாலாமோ' என்பனவும் பாடங்கள். 'நெறியினில் நோக்கும் நேர்மை, என்ற பாடத்துக்குக் (காரணகாரியத்தொடர்ச்சி) முறைப்படி (இன்ன பயன் இன்னவினையால் விளைந்ததென்று) காணும் நுட்பம் என்று பொருள் கூறலாம். 'நெடிதுநீ நோக்கும் நோன்மை' என்ற பாடம், சவரிராயர் கிருஷ்ணமாச்சாரியர் பதிப்பிற் கண்டது. 'எம்மால்' என்ற பாடம், ஷை பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ளது.

இவ்வுலக நீதிபதியான இறைவன் (—அரசன்) இவ் வுலகிற் பிறந் தார்க்கு, அவர்கள் வாக்கினாலும் காயத்தினாலும் செய்யும் நன்மை தீமை களுக்கு முறையே சம்மானமும் தண்டனையும் அளித்தல்போல, சர்வ லோக நியாயாதிபதியான இறைவன் (—கடவுள்) எவ்வுலகிற் பிறந்தாரும் வாக்குக் காயங்களாற் செய்யும் நன்மை தீமைகளுக்கேயன்றி மனத்தாற் செய்யும் நன்மை தீமைகளுக்கும் முறையே நற்பயன் தீப்பயன்களை அருள்பவன் என்பது போதர, 'தருமம் (—நீதி) நீ என நின்ற நம்பி' என்றுரனென்க.

ஊனக்கண்ணில்லார்க்கு அக்கினி காணப்படவில்லையாயினும் அதன் இயற்கைக்குணமான சூடு தெரிதல்போல, ஞானக்கண்ணில் லார்க்கு இறைவன் காணப்படாவிட்டாலும் அவன் இயற்கைக்குணமாய் அவன் ஆணை யெனத்தக்க காரணகாரியத்தொடர்பு நியதி* தெரியலாவ தாம். உயிர்கள் தாந்தாம் செய்யும் வினைகளுக்குரிய பலன்களை அடை யும்படி இறைவன்செய்யும் நீதியாகிய கர்மபலநியதி யென்ற வினைச்சட் டம்† மேற்கூறிய காரியகாரணத் தொடர்பு நியதியுளடங்கியது. இறை

* Law of Causation. † Law of Karma.

வன் குணமாண நீதியை இறைவனென உபசரித்துக் கூறியதாகத், 'தருமம் நீயென நின்ற நம்பி' என்றதைக் கொள்ளலாம்.

வினைகளுள் கீரைவிதைபோல விரைவிற் பலன்றருபவையும் பனைவிதைபோல நெடுங்காலஞ்சென்று பயனளிப்பவையும் உள என்பர். அவ் விருவகைவினைகளுள் பிந்தியவினைகளின் விளைவுகளை அறிதல் பேரறிவாளர்க்கே இயலும் என்பது குறிக்க, 'நெடிது நீ நோக்கும் நோன்மை' என்றானென்க.

வாலி இராமன் அருளிய தத்துவஞானத்தால் அவனை அறிந்தபடி கூறித் துதித்தல்.

483 "ஏவுகூர் வாளியால் எய்து,நா யடியனேன்
ஆவிபோம் வேலைவாய், அறிவுதந் தருளினாய்!
மூவர்நீ! முதல்வன்நீ! முற்றும்நீ! மற்றும்நீ!
பாவம்நீ! தருமம்நீ! பகையும்நீ! உறவும்நீ!"

இ-ள். "அம்பினால் எய்து அடியேன் ஆவி நீங்குந்தருணத்தில் தத்துவஞானத்தைத் தந்தருளினாய்? (அதனால் என்வினைக்குத் தக்க பலனடையச்செய்தா யென்பதை அறிந்ததேயல்லாமல், பிரம விட்டுணு ருத்திரர் என்னும்) மூவரானவனும் நீயே! (என்பதையும், அம் மூவருள்) முதல்வனானவனும் நீயே! (என்பதையும், அறியப்பட்டபொருள்கள்) அனைத்தும் நீயே! (என்பதையும், அறியப்படாத) மற்றைப் பொருள்களும்,) நீயே! (என்பதையும்,) தருமமும் நீயே, அதர்மமும் நீயே! (என்பதையும்) சிநேகமும் நீயே, பகையும் நீயே! (என்பதையும் பிரத்தியக்ஷமாகத் தெரியலானேன்" (என்று வாலி கூறினான்.)

ஏவு கூர் வாளி - ஏவப்படும் கூரிய அம்பு. நாயடியனேன் - நாய்போற் கடைப்பட்ட அடியேன். 'அடியேன்' அன்சாரியைபெற்று 'அடியனேன்' என ஆகியது. அறிவு - பேரறிவு - தத்துவஞானம் - மெய்யுணர்வு. உறவு - சிநேகம்.

பாவம் நீ தருமம் நீ என்றும், பகையும் நீ உறவும் நீ என்றும் ஒரு பொருளையே ஒன்றேடொன்று முரண்பட்ட இரண்டிரண்டெதிரிடைப் பொருள்களாகக் கூறியது, பரம்பொருளன்றிப் பாவமுமில்லை தருமமுமில்லை, பகையுமில்லை உறவுமில்லையென்பது குறித்தது. இதன் உட்கோள் யாதெனின், அது வருமாறு:—

நஞ்சும் அமுதமும் தோன்றுதற்கிடமாயிருந்த பாற்கடல்போலப் பாபமும் புண்ணியமும் தோன்றுதற் கிடமாக உள்ளவன் இறைவன். முறை தவறி முயன்றபோது விடத்தையும் முறையாக முயன்றபோது அமிழ்தத்தையும் தேவர்களுக்குத் திருப்பாற்கடல் கொடுத்தாற்போலச், சீவர்களுக்கு, இறைவன், அவர்கள் பாவஞ்செய்தபோது பாபபலனையும் புண்ணியஞ்செய்தபோது புண்ணியபலனையும் தருதலால், (பின்னர், 'உண்டெனும் தருமமே உருவமா யுடையநிற்-கண்டனன்' என வாலி கூறுமாறு) அவனைத் தர்மஸ்வரூபி என்னும் நீதி வடிவினன் என்பர். இது தீச்செயல், இதற்குத் தண்டனை இது; இது நற்செயல், இதற்குச் சம்மானம் இது என்று விதித்துத் தீச்செயல்செய்தார்க்குப் பகையாய் நற்செயல்செய்தார்க்கு நட்பாயிருக்கும் நீதியின் அமிசங்களாய்த் தீச்செயல் நற்செயல்களும் பகை நட்புக்களும் இருத்தல்போல, இறைவன் அமிசங்களாய்ப் பாப புண்ணியங்களும் பகை நட்புக்களும் உள்ளன.

[தொடரும்.]

வெ. ப. சுப்பிரமணிய முதலியார்.

உ

நன்னூல் ஆராய்ச்சியுரை.

எழுத்ததிகாரம்—எழுத்தியல்.

சார்பெழுத்து.

உயிர்மெய் யாய்த முயிரள பொற்றள
பஃகிய இஉ ஐஔ மஃகான்
தனிநிலை பத்துஞ் சார்பெழுத் தாகும்.

என்பது சூத்திரம்.

(இதன் உரை.) இப்பத்துஞ் சார்பெழுத்தாம்.

இச்சூத்திரத்திற்கு மயிலைநாதர், சங்கரநமச்சிவாயர், இராமாநுச கவிராயர் ஆகிய உரையாளர் மூவரும் ஒரேபொருள் கொண்டனர்.

மயிலைநாதர்—விசேடவுரையின்கண் என்னை ? "எழுத்தெனப் படுப வகரமுத னகர விறுவாய்—முப்பஃதென்ப—சார்ந்துவரன் மரபின் மூன் றலங் கடையே" என ஆசிரியர் தொல்காப்பியனாரும் இவ்வாறு முதல் சார்பென வகுத்துக்கொண்டாரென்க. அஃதே ; அவர் சார்பெழுத்தென மூன்றே கொண்டாராலோவெனின் அஃதே ; நன்று சொன்னாய் ! ஒழிந் தவை எப்பாற்படு மென்றார்க்கு மூன்றுவதோர்பகுதி சொல்லலாவ தின்மையானும் முதலெழுத்தாந்தன்மை அவற்றிற்கின்மையானும் சார் பிற்றோன்றுதலானும் இப்பத்துஞ் சார்பாகவேகொள்ளவேண்டுமென் பது' எனத் தொல்காப்பியர்மதத்திற் குற்றங்கூறினர்.

சிவஞானமுனிவர்—திருத்திய நன்னூல்விருத்தியுரையில் முனிவர், 'இனி ஆசிரியர் தொல்காப்பியர் செய்கையொன்றனைநோக்கிச் சார் பெழுத்து மூன்றெனக் கருவிசெய்தாராகலெனின் இவ்வாசிரியர் செய்கை யும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்தெனக் கருவிசெய்தா ரென்பதும் உய்த்துணர்க' என ஓராற்றாற் சமாதானங் கூறுமாறு கூறி னர்.

இலக்கணவிளக்கநூலார்--ஆய்தக்குறுக்கத்தை நீக்கிச் சார்பெழுத்து ஒன்பதெனக் கொண்டனர். தாம், சார்பெழுத்து மூன்றெனக் கூறாது ஒன்பது எனக் கொண்டதற்கு மயிலைநாதர் கூறுங் காரணமே இயம்பினர். நன்னூலார் புகன்ற ஆய்தக்குறுக்கத்தை, "குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி--உயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" என ஒருமொழிக்கண்வரும் ஆய்தங்கூறி, "ஈறியன் மருங்கினு மிசைமைத் தோன்றும்" என நிலைமொழியீறு வருமொழிமுதலொடு புணர்ந்துநடக்குமிடத்துங் கஃறீது, முஃடீது எனத் தன் அரைமாத்திரையே இசைக்குந்தன்மைத் தோன்றுமென ஆசிரியர் தொல்காப்பியனார் அதனைப் புணர்மொழிக்கண் ஆய்தமாகக் கூறினமையான் ஆய்தக்குறுக்கம் ஒன்று இன்று" எனக் கூறி மறுத்தனர்.

சார்பெழுத்திலக்கணம்.

மயிலைநாதர், "அவையே தம்மொடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும் இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந்தும் விகாரத்தால் வருதலிற் சார்பெழுத்தென்றாயின வெனக் கொள்க" என்றனர்.

சங்கரநமச்சிவாயர், "உயிரும் மெய்யுங் கூடிப் பிறத்தலும் அலகு பெற்றும் அலகுபெறாதும் ஒருபுடையொத்து முதலெழுத்தி னிடையே சார்ந்துவருதலும் முதலெழுத்தின் திரிபுவிகாரத்தாற் பிறத்தலும் ஆம்" என்றனர்.

இலக்கணவிளக்கநூலார், "முதலெழுத்தாந்தன்மை இவற்றிற்கின்மையானும் சார்பில் தோன்றுதலானும் சார்பெழுத்தாம்" என்பர்.

சிவஞானமுனிவர் திருத்திய நன்னூல்விருத்தியுரையில் முனிவர், "உயிர்மெய் யொழிந்தன அகர முதலியனபோற் றனித்தானும் ககரமுதலியனபோல் அகரமொடு சிவணியானும் இயங்குமியல்பின்றி ஒருமொழியைச் சார்ந்துவருதலே தமக்கு இலக்கணமாகவுடைமையின் சார்பெழுத்தாயினவெனக் கோடலுமா மென்க" என்றனர்.

சிவஞானமுனிவர் தொல்காப்பிய முதற் சூத்திரவிருத்தியில் "ஆல் என்புழி உயிர் முன்னும் மெய் பின்னும் நின்று மயங்கினாற்போல, லா என்புழியும் மெய் முன்னும் உயிர் பின்னும் நின்று மயங்கினவேயல்லது

உயிரும் மெய்யும் ஆகிய தந்தன்மை திரிந்து வேறாகாமைக்கு, "மெய்யோடியையினு முயிரிய றிரியா" என்ற தொடக்கத்துச் சூத்திரங்களே சான்றாகலான் உயிர் மெய்யாகியகாலத்துங் குறின்மை நெடின்மையென னுமுயிர்த்தன்மையும் வன்மை மென்மை இடைமை யென்னு மெய்த்தன்மையுந் தம்மியல்பிற் றிரிவுபடாமையானும், உடன்மே லுயிர்வந் தொன்றுதல் பொன்மணிபோல வியல்புபுணர்ச்சியேயா மென்பவாகலானும், ஒற்றுமைநயத்தா னுயிர்மெய் யென்பதனைத் தகாஞாழல்போல உம்மைத்தொகைநிலைக்களத்துப்பிறந்த வன்மொழித்தொகை யென்பார்க்குத் தகரமு ஞாழலுங்கூடிய சாந்து பின்னர்த் தகரமு ஞாழலு மாகாதவாறுபோல மெய்யுயிர்நீங்கிற் றன்னுருவாதல் பொருந்தாமையானும், துணங்கை என்பது மெய்ம்முதல் உயிரீறு மெய்ம்மயக்கமெனவும் வரகு என்ப துயிர்த்தொடர்மொழிக் குற்றியலுகரமெனவுங் கொள்வதன்றி, உயிர்மெய்ம்முதல் உயிர்மெய்யீறு உயிர்மெய்ம்மயக்கம் உயிர்மெய்த்தொடர்மொழிக் குற்றியலுகரமெனக் கொள்ளாமையின் ஒற்றுமைநயம்பற்றியொன்றென்பதனு லொருபயனின்மையானும், மெய்களெல்லாம் உயிர்வந்தொன்றுவ தனித்துநின்றவழியே மாத்திரைகொள்ளவு மெழுத்தெண்ணவும்படு மென்பது அவற்றியல்பாகலின் அதுபற்றி யொன்றெனல் வேண்டாமையானும், அவ்வியல் பறிந்துகோடற்குத் தனித்துநின்றமெய்யை யொற்றெனவும் புள்ளியெனவும் உயிரொடுகூடிய மெய்யை உயிர்மெய்யெனவுஞ் சிறப்புப்பெயரிட்டாளுத லாசிரியர்கருத்தாகலானும், உயிரோடுகூடியவிடத்து வரிவடிவு வேறுபடுதலின் அதுபற்றிப் "புள்ளியில்லா வெல்லா மெய்யும்" என மெய்மேல்வைத்துச் சூத்திரஞ்செய்து வடிவெழுத்திலக்கணங் கூறினாரன்றி ஒலியெழுத்திலக்கணம் வேறுபடக் கூறாமையானும்," எனக் கூறி உயிர்மெய் சார்பெழுத்தாகா வென்றனர்.

"ஐகாரக் குறுக்க முதலியன ஒரு காரணம்பற்றிக் குறுகினவாகலிற் சிறுமாம் பெருத்துழியும் பெருமாஞ் சிறுத்துழியும் வேறொருமரமாகாதவாறுபோல வேறெழுத்தெனப்படாவாகலானும்" என்று ஐகாரக்குறுக்க முதலியன சார்பெழுத்தெனப்படா வென்றனர். "கேண்மியா வரகு என்பனவற்றி னிகரமு முகாரமும், போனு மென்புழி அரைமாத்திரையாய்நின்ற மகரம், போன்ம் என லகரம் னகரமாய்த்திரிந்து ஈரொற்றுடனின்ற காரணத்தாற் பின்னர்க் கான்மாத்திரையாய்நின்றாற்போல, முன்ன ரொருமாத்திரையாய்நின்று பின்ன ரொருகாரணம்பற்றி யரை

மாத்திரையாகாது மகரமும் வல்லெழுத்துமாகிய மெய்யெழுத்தினைச் சார்ந்து என்று மரைமாத்திரையாயேநிற்கு மொருதன்மையவாயினும், அப்பெற்றியுணராது இவை யரைமாத்திரைபெறுதல் மகரக்குறுக்கம் போலச் செயற்கையாற்போலு மென்று உலகமலையாமைப்பொருட்டு இவை யின்னனமாந லியல்பென்பார், குற்றிகரம் குற்றுகாம் என்று ஒழியாது குற்றியலிகரங் குற்றியலுகர மெனக் குறியிட்டார். இக் குறியீடு முணராதார் ஒருமாத்திரையாய்நின்ற குற்றெழுத்துக்களே இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந்த காரணத்தால் அரைமாத்திரையாய்க் குற்றியலிகரக் குற்றியலுகரமென நின்றன வெனக் கூறித் தமதறியாமையைப் புலப்படுப்பர். ஆசிரியர் "குற்றிய லுகாமு மற்றென மொழிப" என்னுஞ் சூத்திரத்தாற் குற்றியலுகரமும் புள்ளிபெற்று நிற்குமென முற்றுகரத்தோ டிதனிடை வரிவடிவினும் வேற்றுமை தோன்றக்கூறி உம்மையாற் குற்றியலிகரமும் புள்ளிபெற்றுநிற்குமென் றோதினமையானும், "குற்றிய லிகர நிற்றல் வேண்டும்" எனவும் "குற்றிய லுகரம் லல்லா ரார்ந்தே" நிற்றல் வேண்டும் எனவுங் கூறிய தன்றி இவைபற்றி மாத்திரை குறுகுமென்னுமையானும், "புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே" "ஆயிரு மூன்றே யுகரங் குறுகிடன்" என்புழியும், "யகரம் வருவழி யிகரங் குறுகும்" என்புழியும், "கொங் கலர் பூம்பொழிற் குறுகினர் சென்றுழி" "தீவினை முதிர்வலைச் சென்று பட்டிருந்த—கோவலன் றன்னைக் குறுகின னாகி" "கோயின் மன்னனைக் குறுகினள் சென்றுழி" "நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண் ணென்னுந் தீ" "ஆறுங் குறுகா ரறிவுடையார்" என்புழிப்போலக் குறுகுதல் அணுகுதலென்னவே பொருள்படுமாகலானும், அவ்வாறன்றிக் குறைதலே பொருளாயினுங் குற்றுயிர் குற்றெழுத்தென்றாற்போலத் தம் மின் மிக்கிசைக்கும் எழுத்துக்களை நோக்கிக் குறுகுமென்றாரெனவேபடு மாகலானும், அங்ஙனங் கொள்ளாக்கால் "எல்லா விறுதியு முகர நிறை யும்" என்புழிப் புணர்ச்சிக்கண் முற்றுகரமாய்நிற்குமெனப் பொருள் பட்டு இச்சூத்திர மாறுகொளக்கூறலாய்முடியுமாகலானும், குற்றியலிகர முங் குற்றியலுகர மும் ஆய்தம்போல வேறெழுத்தேயாவனவன்றி, ஒரு மாத்திரையாய்நின்ற இகரவுகரங்களே மகரக்குறுக்க முதலியனபோல ஒருகாரணம்பற்றி யரைமாத்திரையாய்நின்றனவல்ல வென்பது தெற் றென வுணர்க.

அற்றேல், ஐகாரக்குறுக்கம் மொழியிடை கடைகளென்னு மிடங் காரணமாகக் குறுகியிசைப்பதுபோலக் குற்றியலிகர குற்றியலுகாரங்களும் இடமும் பற்றுக்கோடுங் காரணமாகக் குறுகியிசைத்தலின், இவற்றை யியல்பென்ற தென்னையெனின்; அறியாதுகடாயினும்! அவை காரணமாகக் குறுகியிசைப்பனவாயின், இங்கு எது தாது என்னும் வடமொழி யிறுதியுகாரமும் அவ்விடமும் பற்றுக்கோடுமுடைமையின் அவை காரணமாகக் குறுகியிசைத்தல்வேண்டும்; காரணமுள்வழிக் காரியமுண்டாதல் ஒருதலையாகலின். அங்ஙன மிசையாமையின், இடமும் பற்றுக்கோடுங் குற்றியலிகர குற்றியலுகாரங்களிற்றற்குச் சார்பாவனவேயன்றிக் குறிகியிசைத்தற்குக் காரணமாகாவெனக் கொள்க. அஃதேல் வடமொழியின் அறுவகையிடமும் வல்லெழுத்தும் பற்றுக் கோடுங் குற்றியலுகாரத்திற்குச் சார்பாகாமையின் இலக்கணவழுவாம் பிறவெனின், ஆகாது; குற்றியலுகாரம் இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந் தன்றி நில்லாதென்றதல்லது இடமும் பற்றுக்கோடுங் குற்றியலுகாரத் திற்குச் சார்பாயல்லது வாராவென்னும் யாப்புறவின்மையின். குற்றிய லுகாரந் தமிழ்ச்சிறப்பெழுத்தாகலின், வடமொழியின் வாராதாயிற்று. இக்குற்றியலிகரக் குற்றியலுகர உண்மையறியாத வுரையாசிரியர் "இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே" என்பதற்கு இடைப்படி னுங் குறுகுமென உம்மையை மாற்றி, இறந்தது தழீஇயிற்றென்குவர். அஃ தாசிரியர்கருத்தொடு முரணுமென்பது இக்கூறியவாற்றான் அறிக. இன்னும் புணர்ச்சிவேற்றுமைபற்றி வேறாயிற்றென்பார்க்குக் களவு கனவு முதலியவற்றுகரமும் புணர்ச்சிவேறுபட்டுக் குற்றியலுகாரத் திற்குரிய விதிமுழுவதூஉம் பெறுதலின் அதனையுங் குற்றியலுகர மெனக் கோடல்வேண்டும்; அவ்வாறு கொள்ளாமையின் அவர்க்கு மது கருத்தன்றென மறுக்க, எனக் கூறி மறுத்தனர்.

சிவஞானமுனிவர், தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியிற் செப் பியவற்றிற்கு முரணாய் நன்னூல்விருத்தியில் அவர் திருத்தியதாய்க் காணப்படுதலின் அஃது அவர்திருத்தியதோவென ஆய்தற்பாலது. அவர் திருத்தியதாயின், அங்ஙனந் தவறியதற்கேது இலக்கணவிளக்க நூலார்மீதுகொண்ட சீற்றமும் நன்னூலாரிடம்வைத்த அன்புமே யாம் என்பதன்றி வேறுசெயலில்லை. ஓரமையம் நன்னூல்விருத்தியைத் திருத்தியபின்னர், தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தி செய்திருத்தல் வேண்டும்.

மயிலைநாதர், உயிர்மெய் சார்பெழுத்தாவான்வேண்டி "அவையே தம்மொடுதாஞ் சார்ந்து விகாரத்தால் வருதலின்" எனச் சார்பெழுத்திலக்கணங் கூறுமிடத்து மொழிந்தனர். அற்றேல் லா என்புழி லகரம் சார்பெழுத்தோ அன்றி ஆகாரம் சார்பெழுத்தோ வென வினவுயினர்க்கு லகர மெய்யும் ஆகாரவுயிரும் தம்மொடுதாஞ்சார்தலின் இரண்டும் சார்பெழுத்தெனல்வேண்டும். அங்ஙனங்கூறின், ஆல் என்புழியும் தம்மொடுதாஞ் சார்ந்துவருதலாற் சார்பெனவே படும்; இரண்டுங்கூடித் தந்தன்மையிற் றிரிந்து ஓரெழுத்தாயினவெனக் கூறுதுமெனின் "மொழிமுதலெழுத்தைக்கூறுமிடத்தும் புணர்ச்சிக்கண்ணும் பிறண்டும் ஓரெழுத்தாய்க்கொள்ளாமையானும் குறின்மை நெடின்மை யென்னு முயிர்த்தன்மையும் வன்மை மென்மை இடைமை யென்னு மெய்த்தன்மையும் தம்மியல்பில் திரிவுபடாமையானும், "மெய்யோ டியையினு முயிரிய றிரியா" என்றமையானும் திரிந்தனவன்று" எனச் சிவஞானமுனிவர் கூறியதே பொருந்தும். அன்றியும், தொல்காப்பியர் நூன்மரபின்கண் முதற் பதின்மூன்று சூத்திரங்களான் ஒலிவடிவுகூறிப் பின் சிலவற்றிற்கு வரிவடிவுகூறுவான் தொடங்கி "உட்பெறு புள்ளி யுருவா கும்மே" எனவும், "மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்" எனவும், "எகர ஒகரத் தியற்கையு மற்றே" எனவுங் கூறி மெய்யோ டுயிர்கூடின் மெய் வரி வடிவு வேறுபடும் எனப் புகல்வான்கருதி, "புள்ளி யில்லா வெல்லா மெய்யு, முருவுரு வாகி யகரமோ டுயிர்த்தலு, மேனை யுயிரோ டுருவுதிரிந் துயிர்த்தலு, மாயீ ரியல வுயிர்த்த லாறே" எனச் சூத்திரித்தனர். இப் பெற்றியுணராது இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஒலிக்கும் இலக்கணங்கூறினரென மயங்கி "உயிர்த்தல்" என்பதற்கு ஒலித்தலெனப் பொருள்கொண்டனர். உயிர்த்தல் என்பதற்குத் தோன்றுதலெனவே பொருள்கொள்ளவேண்டும். வரிவடிவு வேறுபடுதலின் ஒலிவடிவு வேறுபடுமோவென ஐயுற்றார்க்கு ஐயமகற்ற "மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே" எனச் சூத்திரித்தனர். இதனானே ஆல் என்புழி உயிரும் மெய்யும் மயங்கிநின்றமுறையே ஒலித்தன; அங்ஙனமே லா என்புழி

யும் மெய்யும் உயிரும் மயங்கிநின்ற முறையே ஒலித்தனவெனக் கூறியவா றாயிற்று. ஆகவே ஒலிவடிவு வேறொன்றின்று என்பது பெற்றாம்; எனவே உயிர்மெய் சார்பெழுத்தென இயம்ப இடனின்று.

மயிலைநாதர் உயிர்மெய் சார்பாவான்கூறிய விலக்கணத்தைமறந்து, "புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்" என்ற நன்னூற்சூத்திரத் தின்கீழ் "உயிர்மெய்யென்பது உம்மைத்தொகை" என்றனர்.

நன்னூலார் உயிர்மெய் சார்பெழுத்தென வோரெழுத்தாந்தன்மை பெறக் கூறியதைக் கருதாது மெய்யீற்றுப்புணரியலில் மெய்யோ டுயிர் வந்து புணர்வதை, "உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே" எனச் சூத்திரித்து இயல்புபுணர்ச்சி யென்றனர். அவர் சூத்திரித்தனவே ஒன்றோடொன்று முரணுவதை நோக்குக.

ஆய்தம் சார்பாவான்கருதி "இடஞ்சார்ந்து விகாரத்தால்வருத லின்" என்றனர். "குறியதன் முன்னர் ஆய்தப் புள்ளி-யுயிரொடு புணர்ந்த வல்லாறன் மிசைத்தே" என்றதனானே, ஆய்தம் வருதற் கிடங் கூறியதன்றி அக்காரணத்தானே ஆய்தம் சார்பெழுத்தென்றதன்று. அன்றியும் விகாரத்தால் என்று செப்பியதனால் எம் முதலெழுத்தின் விகாரம் என்றார்க்கு விடையின்மை யுணர்க. ஆய்தக்குறுக்கம் ஒன் றின்று என்பதை இலக்கணவிளக்க நூலாசிரியர் காரணங்காட்டி மறுத்தனர்.

குற்றியலிகரங் குற்றியலுகரம் ஐகாரக்குறுக்கம் அளபெடைமுதலி யன சார்பெழுத்தாகக்கொள்க; "இடமும் பற்றுக்கோடுஞ் சார்ந்து விகாரத்தால்வருதலின்" என்றனர். சிவஞானமுனிவர் தொல்காப்பிய முதற்சூத்திரவிருத்தியில் "சார்பெழுத்துவரும் இடங்கூறியதன்றி இடமும் பற்றுக்கோடும் சார்பிற்குக் காரணமாகாவென்ற தடைவிடை களே சாலும். பெருமரம் சிறுத்துழியும் சிறுமரம் பெருத்துழியும் வேறொருமரமாகாதவாறுபோல முதலெழுத்தின்விகாரமான ஐகாரக் குறுக்கம் சார்பெழுத்தாகாது முதலெழுத்தேயாம். குற்றியலிகரங்

குற்றியலுகரம் ஆய்தமேபோல முதலெழுத்தின்விகாரமன்றி, மொழியைச்சார்ந்துவரும் தனித்தவெழுத்தாயிற்று. எனவே மயிலைநாதர் சங்கரநமச்சிவாயர், இலக்கணவிளக்கநூலாசிரியர் ஆகிய இவர்கள் கூறிய சார்பிலக்கணம் பொருந்தா.

ஆய்தக்குறுக்கமொன்றுகண்டு சார்பிற் சேர்த்துக்கொண்ட நன்னூலார் "இடைப்படிற் குறுகு மிடனுமா ருண்டே—கடப்பா டறிந்த புணரிய லான" என்றதனால் வரும் செக்குக்கணை சுக்குக்கோடு, என்பனவற்றில் உள்ள குற்றியலுகரம் தன் அரைமாத்திரையிற் குறைந்து கால் மாத்திரையாய் இசைப்பனவற்றை எற்றிற்குத் தனியே சார்பெழுத்தாகக் கணக்கிடவில்லை.

"சார்ந்துவரி னல்லது தமக்கியல் பிலவெனத்
தேர்ந்துவெளிப் படுத்த வேனை மூன்றுந்
தத்தஞ் சார்பிற் பிறப்பொடு சிவணி
யொத்த காட்சியிற் றம்மியல் பியலும்"

என்ற தொல்காப்பியப் பிறப்பியற் சூத்திரத்தானே தனித்தியங்கு மியல்பின்றி ஒருமொழியைச் சார்ந்துவருதலே சார்பெழுத்திலக்கணம் என்பது பெற்றும். எனவே இவ்விலக்கணங்கொண்டொளிர்வன குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தம் ஆகிய இம்மூன்றுமேயாம்.

[தொடரும்]

P. S வேதாசல ஐயர்.

மதிப்புரை.

திருப்பரங்குன்றம் ஸ்தலபுராணம் (ஸம்ஸ்க்ருத மூலமும் தமிழுரையும்):—இது, மதுரை மீநாக்ஷி சுந்தரேசுவரர் தேவஸ்தானம் டிரஸ்டியும் திருப்பரங்குன்றம் சுப்பிரமணியர் தேவஸ்தானம் டிரஸ்டியுமான மகா-ள-ள-ஸ்ரீ ஆர். துரைஸாமிநாயுடுகாரு அவர்களது நன்முயற்சியால் முதல்முறையாக அச்சிற் பதிப்பித்து வெளியிடப்பட்டிருக்கிறது.

இதில் மூர்த்திமகத்துவம், தலமகத்துவம், தீர்த்தமகத்துவம் ஆகிய இவைகளும் சுப்பிரமணிய ஸ்வாமி திருவிளையாடல்களும் துதிகளும் தத்துவோபதேசங்களும் பிறவும் பன்னிரண்டு அத்தியாயங்களிற் சொல்லப்பட்டுள்ளன. இவையெல்லாம் வடமொழியில் சைவ மகாபுராணத்தில் ஏகாதசருத்திரஸம்ஹிதையின் உபரிபாகத்தில் க்ஷேத்திரகண்டத்தில் உள்ளனவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அத்தியாயத்தையும் படிப்பவர் அதன்பொருளை நன்றாய் அறிந்து கொள்ளும்படி பத்திபத்தியாகச் சுலோகங்களும் அவற்றிற்குத் தமிழில் அர்த்தமும் எழுதிப் பதித்திருப்பது மிகவும் பயனளிக்கத்தக்கது. இப்புராணத்தை அச்சிட்டுதவுதற்கு மதுரைவாசியான பண்ருட்டி வேங்கடசாமி நாயுடு அவர்கள் குமாரத்தி ஸ்ரீமதி கோவிந்தம்மாள் பொருளுதவி செய்தது பாராட்டத்தக்கது. அவரது ஆஸ்திகபுத்தியும், தருமசிந்தையும் நன்குமதிக்கத்தக்கன. இப்புத்தகத்தின் கிரயத்தொகைகளை ஸுப்பிரமணியஸ்வாமியின் விபூதி அபிஷேகத்துக்கு உபயோகமாகும்படி ஏற்பாடுசெய்திருப்பது இப்புத்தகம் வாங்குபவர்களுக்கும் அப்பெரும்புண்ணியம் கைகூடும்படியிருக்கிறது. ஒவ்வொரு தேவஸ்தானத்துக்கும் இப்படிப்பட்ட டிரஸ்டிகளும் தருமசீலர்களும் கிடைப்பார்களானால் ஆலயவழிபாடுகளுக்கு வேண்டும் அநுகூலங்களைச் செய்து ஆலயதர்மங்கள் நன்குபரிபாலிக்கலாகும். 250-பக்கங்களும் இடையிடையே படங்களும் அடங்கிய இப்புத்தகத்தின் விலை ரூ 1-8-0. வேண்டுவோர் திருப்பரங்குன்றம் தேவஸ்தானம் பேஷ்கார் ஆபீஸிலும் மதுரை மீநாக்ஷிசுந்தரேசுவரர் தேவஸ்தானம் பேஷ்கார் ஆபிஸிலும் பெறலாம். (பத்துப் புத்தகம் சேர்த்து வாங்குபவர்களுக்குத் தபால் சார்ஜ்இல்லாமல் அனுப்பப்படும் என்று விளம்பரத்தில் கண்டிருக்கிறது.)

சுந்தரர் புகழ்மாலை :–இது, கிழக்குமருதூர்ச்சுதந்திர நூற்கருவூல அமைச்சரான திருவாளர் தி. கு. கி நாராயணசாமி நாயுடு அவர்களால், சைவசமயாசாரியருள் இறைவனாற் றடுத்தாட்கொள்ளப்பட்ட சுந்தரமூர்த்திநாயனார்விஷயமாய்த் திருவிசைப்பா முதலிய பல தமிழ்நூல்களிலிருந்து எடுத்துத் தொகுக்கப்பட்ட (சற்றேறத்தாழ) நூற்றைம்பது செய்யுள்களையுடையதொரு சிறிய தொகைநூலாகும். இது சுந்தரர் புகழ்களை அநுசந்தானம் செய்வார்க்குபயோகமானது. திருத்தமாகவும் அழகாகவும் பதிக்கப்பட்ட இப்புத்தகத்தின் விலை அணா நான்கு.

இந்நூல் கிடைக்குமிடங்கள் :—

1. திருச்சிற்றம்பல இல்லம், கிழக்குமருதூர், திருநாமநல்லூர்ப் போஸ்டு, விழுப்புரம் மார்க்கம்.

2. முருகவேள் புத்தகசாலை, 12 கணபதி முதலி தெரு, இராயப்பேட்டை, சென்னை.

பாப்பாவினம்.

பாப் பாவினம் என்பது உம்மைத்தொகைநிலைத்தொடராய்ப் பாவும் பாவினமும் என்று பொருள்படுமேனும் ஈண்டு உம்மைத்தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைநிலைத்தொடராய்ப்பாவும் பாவினமும் அமைய இயற்றியதொரு பிரபந்தத்தைக் குறிக்கும். இதனையியற்றியவர் பெயர் முதலியவற்றை இதிலிருந்து அறிதற்கில்லையாயினும் இது மாறனலங்கார உரையாசிரியரால் இயற்றப்பட்டதென ஊகித்தற்கிடமுண்டு. இதிலமைந்த செய்யுட்கள் சொற்சுவை பொருட்சுவை முதலிய பலநலனும் பெற்றுத் திருமால் விஷயமான துதிகளாய் மிளிர்கின்றன. இதன் ஏட்டுப்பிரதியொன்று செந்தமிழ்ப் பத்திராசிரியர் ஸ்ரீ. உப. வே. திரு: நாராயணையங்காரவர்களிடமிருந்து எனக்குக் கிடைத்தது. அதனைச் சிதல் முதலியவற்றால் அழிந்தொழியாது காக்கக் கருதிச் செந்தமிழில் புத்தகஉருவாய் வெளியிடத்தொடங்கியிருக்கிறேன். ஒரு பிரதியேயுண்மையால் பல இடங்களில் உண்மைப் பாடங்கண்டு நிச்சயிக்கமுடியாமல் ஏட்டிலுள்ளவாறே பதிப்பிக்கப்படுகிறது. வேறுபிரதியுள்ளவர்கள் கொடுத்துதவுவார்களாயின் உபகாரமாயிருக்கும்.

[உதவிப்பத்திராசிரியர்.]